**REA.NO.121/2017 in EP.80/2008**

*நாள்.08.03.2018*

ம.சா.4 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் பெறப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

மனு சொத்தின் விஸ்தீரணம், புல எண் என்ன என்றால் தெரியாது. பெருமாள் கவுண்டர், சின்னாகவுண்டர் தெரியுமா என்றால் தெரியும். அவர்களின் தகப்பனார் பெயர் என்ன என்றால் தெரியாது. வாய்மொழி பாகப்பிரிவினை பார்த்தீர்களா என்றால் இல்லை. வாய் மொழி பாகப்பிரிவினையில் யாருக்கு எந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. சின்னாகவுண்டருக்கும், பெருமாள்கவுண்டருக்கும் பாகம் பிரிக்கவில்லை என்றால் நேரில் பார்க்கவில்லை, நேரடியாக தெரியாது. 1971 ஆம் வருட கிரயத்திற்கு சென்றிருந்தீர்களா என்றால் இல்லை. கிரயத்தில் எந்த சொத்து எப்போது வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. 1979 ஆம் வருட கிரயத்திற்கு சென்றிருந்தீர்களா என்றால் இல்லை. மனுதாரர் எனக்கு என்ன உறவு என்றால் மனுதாரரின் மகனும் நானும் நண்பர்கள். மனுதாரரின் கணவர் பெயர் என்ன என்றால் கந்தசாமி. மனுதாரர் பெயர் என்ன என்றால் சௌந்தரம். மனுதாரரை சுந்தரம் என்று தான் அழைப்பார்கள் என்றால் தவறு. மனு சொத்து விவரம் எனக்கு தெரியாது, மனுதாரரின் மகன் என் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. சம்பத் மனு சொத்தில் பாகம் கோரி சொத்துக்கள் அளவீடு செய்யப்பட்டது என்றால் தெரியாது. மனு சொத்தின் செக்குபந்தி என்ன என்றால் ஒரு செக்குபந்தி தெரியும், மற்ற செக்குபந்திகள் சொல்ல முடியுமா என்றால் முடியாது.